**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 110/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 3 |
| Name (திரு/திருமதி) | : குருநாதன் |
| Father's Name/ Husband's Name | : நெடுஞ்செழியன் |
| Village & Taluk | : தையூர் |
| Calling | : கூலி |
| Age | : 47 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.12.2025**

1 முதல் 5 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 பணக்காரசி என்பவரை தெரியும். அ.சா.2 சசிகுமார் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2019 ம் வருடம் ஒரு நாள் இரவு வேலையில் எங்கள் ஊரில் உள்ள கோவில் திருவிழாவிற்காக சசிகுமார் என்பவரை light அமைத்திருந்தார். இது சம்பந்தமாக முன் விரோதத்தில் நானும், சசிகுமார் என்பவரும் எங்கள் வீட்டின் அருகே இருந்தபோது கும்பலாக வந்த அடையாளம் தெரியாத நபர்கள் வந்து எங்களை ஆபாசமாக பேசி தாக்கிவிட்டனர். அதில் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் எங்களை தாக்கவில்லை. காயமடைந்த நான் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். இது சம்பந்தமாக அ.சா.1 செஞ்சி காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். கடந்த 21.07.2019 ம் தேதி இரவு 8.00 மணியளவில் நானும், அ.சா.1 பணக்காரசி அ.சா.2 சசிகுமார் ஆகியோரும் மாயக்கண்ணன் என்பவரின் வீட்டின் அருகே நடந்து சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை. அப்போது எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் லைட் செட்டிங் தொடர்பான முன் விரோதத்தில் ஆஜர் எதிரிகள் எங்களை திட்டி தாக்கினார்கள் என்றால் இல்லை. நானும்,